**திரு.தி.ஜனார்த்தனன்**
**நகர்மன்றத்தலைவர்**

**நகராட்சி அலுவலகம்,**
**புன்செய்ப் புளியம்பட்டி**
**நாள்.12.04.2023**

**அன்புடையீர் வணக்கம்,**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் அவசர கூட்டம் **திருவள்ளுவர் ஆண்டு 2053 மீனம் (பங்குனி) மாதம் 30-ஆம் நாள், 2023-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற உள்ளது. கூட்ட பொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். தாங்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அன்புடன்**

**(தி.ஜனார்த்தனன்)**

**பொருள் எண்.01**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் பொது நிதி 2023-2024ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக வெளிக்கொணர்வு முகமை மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்பணியாளர்களை விநியோகம் செய்தல் பணிக்கு 29.03.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் Online மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விழுக்காடு** |
|---|---|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் தனியார் சேவை முகவர் / வழங்குபவர் /முகமை / ஒப்பந்ததாரர் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ளுதல் | ரூ.165.05 இலட்சம் | RSK TECH TRADERS PVT LTD, 2/165, Thuraiyur to Uppiliapuram Road, Venkatachalapuram, Thuraiyur(TK), Trichy. | 1.80% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | OURLAND ENGINEERING WORKS PVT LTD, 70/1, 1st Floor, Anjugam Nagar 3rd Street, Jaffarkhanpet, Chennai – 600083. | 0.27% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.80% குறைவாக வழங்கியுள்ள திருவாளர்.RSK TECH TRADERS PVT LTD, Trichy அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1316/2021/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.02</u>**

நகராட்சியில் 18 வார்டுகளில் முதிர்ந்த கொசு மற்றும் புழு(லார்வா) நிலையில் உள்ள கொசுபுழு ஒழிப்பு பணிக்காக நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.எண்.10608/2021/எச்1 நாள்.10.11.2021-ல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நகராட்சிகளுக்கு தேவையான கொசு ஒழிப்பு மருந்துகளை வாங்குவதற்கு தமிழ்நாடு மெடிக்கல் கண்ட்ரோல் போர்டு, சென்னை (TNMSC) அவர்கள் நேரடியாக அரசு நிர்ணயம் செய்த விலையில் வாங்கிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்ட நிறுவனமான TAMILNADU MULTIPURPOSE INDICO SERVICE, திருச்சி என்ற கூட்டுறவு நிறுவனம். கொசுபுழு மற்றும் முதிர்ந்த கொசுக்களை ஒழிக்கும் பணிக்கு தேவையான மருந்துகள் மிககுறைந்த அளவே இருப்பு உள்ளது. Pyrethrum-2% extract புகை மருந்து மற்றும் Temephos தண்ணீர் தொட்டிமருந்து, BT மருந்து சாக்கடைகளுக்கு அடிப்பதற்காக பயன்படுத்தும் மருந்துகளை வாங்க நேரடியாக கொள்முதல் செய்து கொள்ள 4.00 லட்சம் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது

**ந.க.எண்.2094/2022/H1**

**அலுவலககுறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண்.03</u>**

நகராட்சிகளில் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்க துறை அரசாணை எண்.1 மற்றும் பசுமை தீர்ப்பாயம் NGT (SZ) in OA No:168/2022(SZ) நாள்: 18.02.2021 மற்றும் தமிழ்நாடு அரசு நாளிதழ் Gazette Extraordinary No:578,579, நாள் 31.12.2022. மேற்கணும் அரசாணியின் படி நகராட்சியில் குடியிருப்பு சுமார் 7735 ஆகும் இதில் செப்டிக் மூலமாக இருந்து வெளியேறும் கழிவுநீரை அவ்வப்போது முறைப்படி செப்டிக்டேன்கில் இருந்து நேரடியாக எடுக்கப்படும் கழிவுநீரை எவ்விதமான ஓடைப்பகுதியிலோ, நீர்நிலைகளிலோ விடக்கூடாது என அரசாணை மற்றும் அரசுநாளிதழ் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மிக அருகில் உள்ள சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் FSTP-யில் நமது நகராட்சியில் இருந்து பணம் (ரூ.1500/-) செலுத்தியபின் வீடு, வணிகவளாகங்கள், நகராட்சியின் பொது மற்றும் சமுதாய கழிப்பிடத்திலிருந்து எடுக்கப்படுகிறது. எனவே தற்சமயம் நகராட்சி பகுதியிலிருந்து எடுக்கப்படும் கழிவுநீரை முறைப்படி சத்தியமங்கலம் நகராட்சி FSTP-ல் விடவேண்டியுள்ளது. சத்தியமங்கலம் நகராட்சியில் இயங்கும் வரும் FSTP-ல் விடும்பொழுது அதற்கான கட்டணம் ரூ.500/-ஆக (புன்செய்ப்புளியம்பட்டியிலிருந்து நகராட்சியின் லாரியில் சத்தியமங்கலம் சென்றுவர கி.மி மற்றும் 1 நடைக்கு டிரைவர் ஊதியம் + பணியாளர்களின் ஊதியம் + கழிவுநீர் வாகன தேய்மானம் ஆகியவற்றை கணக்கில் கொள்ளப்பட்டது) நிர்ணயம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு

வைக்கப்படுகிறது. மேலும் அதற்கான கட்டணத்தை நகர்மன்றம் நிர்ணயம் செய்த தொகையினை நகராட்சியின் துணைவிதிகளின்படி செயல்படுத்த ஈரோடு மாவட்ட அரசுநாளிதழ்களில் வெளியிட வேண்டி உள்ளது. அதற்கான ஒரு பக்கத்திற்கு உத்தேசமாக அல்லது கூடுதலாக ரூ.6900/- அரசு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டி இருப்பதால் அத்தொகையினை செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்**:0449/H1/2023

**அலுவலககுறிப்பு:-**

அ) பொதுசுகாதாரஅவசரம்அவசியம்கருதிமன்றம்அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.04**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/p3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.04.2022 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை ஒரு மாதம்(01.03.2023 முதல் 31.03.2023 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.04.2023 முதல் 30.04.2023 வரை) விபிஎன் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.25/2016/எச்1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**இப்படிக்கு**

**நகர்மன்ற தலைவர்**

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**